**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.749/2023**
**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஷெரிப் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 28th, 2025.

**(1ம் எதிரி ஆஜர். 2, 3 மற்றும் 4ம் எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஆழ்வார்க்குறிச்சி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். 20.09.2022ம் தேதி முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது, அம்பாசமுத்திரம் தீர்த்தபதி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் பேரில், மருத்துவமனை சென்று தகவலைப் பெற்று, மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டிருந்த உள்நோயாளியாக இருந்த துப்பாக்குடி தாலுகா, இராவுத்தர்பேரியை சேர்ந்த கிருஷ்ணன் மகன் கண்ணப்பன் என்பவரை சந்தித்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று, மீண்டும் நிலையம் வந்து 17.00 மணிக்கு ஆழ்வார்க்குறிச்சி காவல் நிலைய குற்ற எண்.183/2022, சட்டப்பிரிவுகள்

341, 294(பி), 307 மற்றும் 506(2) இதசவின் படி வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை, புகார் வாக்குமூலம், இன்டிமேசன் ஆகியவற்றை அம்பாசமுத்திரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தும், மீதி நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை இது தான். அது அ.சா.ஆ.5.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

வழக்கு சம்பவயிடம் ஆழ்வார்க்குறிச்சி காவல் நிலையத்திலிருந்து 5 கி.மீ தொலைவு இருக்கும் என்றால் சரிதான். 10 நிமிடத்தில் காவல் நிலையத்திற்கு சம்பவயிடத்திலிருந்து வந்து விடலாம் என்றால் 15 நிமிடங்கள் ஆகும். வழக்கு சம்பவமானது 19.09.2022ம் தேதி, இரவு 08.00 மணிக்கு நடந்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு மருத்துவமனையிலிருந்து சம்பவம் நடந்த அன்று இரவு 11.00 மணியளவில் தகவல் கிடைத்தது. தகவலை நிலையத்தில் இருந்த பாரா பெற்றுக்கொண்டார். தகவலானது போன் மூலமாக கிடைக்கப்பெற்றது. நான் மருத்துவமனைக்கு சென்று எழுத்து பூர்வமான தகவலைப் பெற்றேன். 19.09.2022ம் தேதி அன்றே எழுத்து பூர்வமான இன்டிமேசன் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இன்டிமேசனை நான் பெற்றுக்கொண்டதாக அதில் குறிப்பு இல்லை என்றால் சரிதான். இன்டிமேசனில் காயம்பட்ட நபர் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அவர் மேல் சிகிச்சைக்கு அனுப்பப்

பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 19.09.2022ம் தேதி இரவே புகார்தாரர் மேல்சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். ஆழ்வார்க்குறிச்சி காவல் நிலையத்திலிருந்து ஒரு மணி நேரத்தில் திருநெல்வேலி சென்று விடலாம் என்றால் பேருந்தில் சென்றால் இரண்டு மணி நேரம் ஆகும். புகார் வாக்குமூலமானது, சம்பவம் நடந்த மறுநாள் மாலை 03.00 மணிக்கு வாங்கப்பட்டது என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் வாங்குவதற்கு நான் மட்டும் தான் சென்றிருந்தேன். புகார் வாக்குமூலத்தில் சம்பவம் நடந்தபோது, வடக்கிலிருந்து கிழக்காக என்பது அடித்து, திருத்தம் செய்யப்பட்டு, மேற்கிலிருந்து கிழக்காக என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதுபோல் புகார் வாக்குமூலத்தில் இராவுத்தர்பேரி ரோட்டில் என்பது இடையில் நுழைத்து வேறு ஒரு பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் எனது மேற்குறிப்பானது, அறிவேன் சாட்சி மற்றும் புகார்தாரரின் கையெழுத்தை ஒட்டி சுருக்கி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில், புகார்தாரரின் செல்போன் எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் பெற்ற அன்று மாலையே இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து அம்பாசமுத்திரம் நீதிமன்றத்திற்கு 20 நிமிடங்களில் சென்று விடலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள் 20.09.2022 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் முதல் தகவல் அறிக்கையானது 26.09.2022 ம் தேதி, காலை 10.30 மணிக்கு பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரரிடம் எந்த வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் எழுதாத வெள்ளைப்

பேப்பரில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு, புகார் வாக்குமூலமானது பின்னிட்டு, இந்த வழக்கிற்கு தோதுவாக எழுதப்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையும் சொன்ன நாள், நேரத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

(2 முதல் 4 எதிரிகள் தரப்பில் 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.